**தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகம் - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2008 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழக சட்டத்தில் 47 (2) ஆவது பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக

திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழிலசார் விளைபயன் ரூபா. 25,112,634 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா.10,632,874 ஆகும். அதன்படி விளைபயன் ரூபா.35,745,508 ஆன வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டுவரும் அளிப்புகள் ரூபா. 61,500,000 ஆல் அதிகரித்திருப்பினும், திறன் துறைசார் அபிவிருத்தி அளிப்புகள் ரூபா. 26,407,134 ஆல் குறைவடைதலும், ஊழியர் செலவினம் ரூபா.75,920,245 தொகை மற்றும் சேவை தொடர்பான செலவினம் ரூபா. 18,878,206 தொகையால் அதிகரித்ததன் காரணமாக மேற்படி நிதிசார் விளைபயன் வீழ்ச்சியடைந்துள்ளது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை தேசிய கைத்தொழில் கல்வி நிறுவனத்தின் பணியாற்-தொகுதி 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆந் திகதி தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்திடம் உள்ளீர்ப்புச் செய்கையில் 2009 ஆம் ஆண்டு யூலை 27 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/E4/47/2/280/1 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக 10 அலுவலர்களை வகிப்பவருக்கு தனிப்பட்ட வகையில் சிரேட்ட விரிவுரையாளர் II பதவியில் அமர்த்தப்பட்டிருந்ததுடன், அந்த அலுவலர்களில் 6 பேர் இதுவரை இப் பதவிக்கு தேவையான ஆகக்குறைந்த தகைமைகளை பூர்த்தி செய்யவில்லை. அவ்வாறு இருக்கையில் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக சம்பளம் மற்றும் ஊழியர் பணியாற்தொகுதி ஆணைக்குழுவின் அனுமதியின்றி கட்டுப்பாட்டுச் சபையின் தீர்மானத்திற்கு அமைவாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 05 ஆந் திகதி 17/2016 ஆம் இலக்க பல்கலை- | அவர்கள் மேற்கொண்ட கோரிக்கையொன்றை அடிப்படையாகக்கொண்டு, அவர்களுக்கான சம்பள அளவுத் திட்டத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து கிடைக்கும் வரை 93 ஆவது கட்டுபபாட்டுச் சபைமூலம் சம்பந்தப்பட்ட மாற்றியமைப்புகளை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | பதவிக்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் உரிய அனுமதிக்கமைவாக சம்பளம் செலுத்தப்படல் வேண்டும். |

க்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் வலுவிலிருக்கும் வகையில் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி 2016 ஆம் ஆண்டு சனவரி தொடக்கம் 2019 செப்தெம்பர் வரை நிலுவை சம்பளம், மேலதிக படிகள், கல்வி கொடுப்பனவுகள், ஆராய்ச்சி கொடுப்பனவுகள் மற்றும் உபசரணை கொடுப்பனவாக மொத்தம் ரூபா. 5,638,012 ஐ பல்கலைக்கழகத்தால் செலவிடப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஆ) 2014 சனவரி 22 ஆந் திகதிய DMS/1670 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கடிதம்மூலம் பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களின் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதியில் உள்ளடக்கப்படாத 6 ஆலோசகர்கள் மற்றும் ஒரு கணக்காய்வாளர் நியமனம் செய்யப்பட்டிருந்தது. அந்த அலுவலர்களுக்கு 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன், மொத்தம் ரூபா.9,903,309 தொகை ஆலோசகர் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ஆலோசகர்களின் சேவையை, ஒப்பந்த அடிப்படையின்கீழ் பெறுகை நடைமுறை பின்பற்றி தெரிவு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களும் அடங்கலாக பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளின் பொருட்டு சிரேட்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கிடைக்காதபடியால் உரிய பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஒப்பந்த அடிப்படையின்மீது பெற்றுக்கொள்ளப்பட்டது. | புதிய பதவிகளை ஏற்படுத்தல் மற்றும் ஆட்சேர்ப்பு பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதியில் இல்லாத ஆலோசகர் பதவிகளின் பொருட்டு கட்டுப்பாட்டுச் சபையின் தீர்மானம்மீது ஒப்பந்த அடிப்படையில் மீளாய்விற்கான ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்து மொத்தம் ரூபா. 2,726,253 கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் கற்கைநெறிகளில், உள்ளடக்கப்பட வேண்டிய பாடவிதானம் தயாரித்தல், அந்த பட்டப்படிப்பு கற்கைநெறிகளை ஆரம்பித்தல், அந்த பட்டப்படிப்பு கற்கைநெறிகளை ஆரம்பித்த பின்னர் சம்பந்தப்பட்ட விடயங்களின் பொருட்டு விரிவுரை நடாத்தல் ஆகிய நடவடிக்கைகள் பொருட்டு, அந்த விடயத்துடன் தொடர்புடைய தேர்சியாளர்களின் அறிவினை பயன்படுத்தலும், மிக பயனுள்ள மற்றும் உபயோகமான நிபுணத்துவ சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனும் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியுடன் இந்த கற்கை பணியாற்தொகுதி உறுப்பினர்கள் இரண்டு பேரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. | புதிய பதவிகளை ஏற்படுத்தல் மற்றும் ஆட்சேர்ப்பு பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) 2011 சனவரி 25 ஆந் திகதி தொடக்கம் 2012 ஆம் ஆண்டு யூலை 31 ஆந் திகதி வரை பட்டநிலை பின் படிப்பு பட்டம் கற்பதற்காக சம்பளத்துடன்கூடிய வெளிநாடு லீவுகளை பெற்றுக்கொண்டிருந்த உதவி விரிவுரையாளர் ஒருவர் காலவெல்லை கடந்த பின்னர் சேவைக்கு சமூகமளிக்காமை காரணமாக உடன்படிக்கை மீறல்மீது அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,553,825 ஆன உடன்படிக்கை பெறுமதியினை அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்திடம் அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பில் சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் 2015.05.07 ஆந் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது. 2020 ஆகஸ்ட் மாதம் 12 ஆந் திகதிய சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடிதம்படி சம்பந்தப்பட்ட முறைப்பாட்டினை கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2020.08.12 ஆந் திகதிய கடிதம்மூலம் பல்கலைக்கழகத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த முறைப்பாடு மற்றும் அதற்கான ஆவணங்களை சட்டமா அதிபர் திணைக்களத்தால் பெயரிடப்பட்டுள்ள வழங்கறிஞரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உடன்படிக்கை பெறுமதி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.5 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்தின் பொருட்டு வேளைத்தளம், வதிவிடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை நிருமாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டு சனவரி 03 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவையால் ரூபா. 927.34 மில்லியன் ஒதுக்கீடு பொருட்டு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் வரவு செலவு மூலம் மொத்தம் ரூபா 268 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் ரூபா. 23,600,993 தொகை ஆலோசனை கட்டணங்களாக செலுத்தப்பட்டிருப்பினும் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரையிலும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகத்தின் நிருமாணிப்புகள் தொடர்பில் துணைவேந்தர் அவர்களால் நியமனம் செய்த உபகுழு, மூன்று கட்டிடங்களிலும் எதிர்பார்க்கப்படும் பணிக்காக ஒரு கட்டிடம் நிருமாணிப்பறத்கு சமர்ப்பித்த பரிந்துரை மற்றும் துணைவேந்தர் அவர்களின் அனுமதிமீது மீண்டும் அமைச்சரவை அனுமதி பெற வேண்டியிருந்தது. அமைச்சு செயலாளர் பதவி பல சந்தர்ப்பங்களில் மாற்றமடைந்ததன் காணரமாகவும் கோவிட் 19 நிலைமை காரணமாகவும் அமைச்சரவை அனுமதி தாமதமடைந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத் தொகையினை ஆகக்கூடிய வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் பயன்படுத்தல் வேண்டும். |
| (ஆ) 2011ஏப்ரல் மாதத்தில் அமைச்சரவைமூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்த தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் பல்நோக்கு ஒலிகூடத் தொகுதி மற்றும் போதனை வசதிகளுடனான தொகுதியுடன் கூடிய கட்டிடம் நிருமாணிப்பதற்கு அந்த ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை திறைசேரியிடமிருந்தும் துறைசார் திறன் அபிவிருத்தி கருத்திட்டம்மூலமும் ரூபா. 434.9 மில்லயின் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அதில் ரூபா.304 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருப்பினும், கணக்கு ஆண்டு இறுதியிலும் ஒலிகூடத்தை பயன்படுத்து-வதற்கு முடியுமான நிலை காணமுடியவில்லை. | ஒலிகூடத் தொகுதியில நிருமாணிப்பு வேலைகளை மேற்கொள்கின்றபோது, நிதி வழங்குவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் அறிவிப்பு பிரகாரம் நிருாணிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. இந்த ஒலிகூடத்திற்காக தற்போது ஒரு பகுதி உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் நிருமாணிப்புகளின் ஒரு பகுதி முடிவுறுத்தப்பட்டுள்ளதால் குறித்த செலவினம், நிறுவனத்தின் நோக்கத்திற்காக பயன்படுத்தும் நிலையில் உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | ஒலிக்கூடத்தை பயன்படுத்துவதற்கு முடியுமான நிலைமைக்கு உருவாக்கி கொள்வதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |